**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021**

**Conducted by Field Work Centre, Thondaimanaru.**

**2nd Term Examination - 2021**

FWC

நாடகமும் அரங்கியலும்

Drama & Theater

Three Hours | Gr -12 (2022) | 58 | T | I,II


## பகுதி I

- **இப்பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 – 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடைகளைத் தெரிவு செய்க.**

01. "முனைப்புப்பெற்ற உணர்ச்சிகளின் தன்னிச்சையான வெளிப்பாடே கலை" எனக் கூறியவர்.
   1) எரிக் நியூட்டன் 2) R.G.கொலிவூட் 3) வில்லியம் வேட்ஸ்வேத்
   4) குரேசே 5) பியேட்ஸ்லி ( )

02. பின்வருவனவற்றில் 'மாறா உணர்ச்சியை' வெளிப்படுத்தும் கலை வடிவம்
   1) நடனம் 2) ஓவியம் 3) இசை
   4) நாடகம் 5) சினிமா ( )

03. சமஸ்கிருதத்தில் 'கலை' என்ற சொல்லுக்கான மூலச்சொல்
   1) கலா 2) கல் 3) நட் 4) கதி 5) கலி ( )

04. பின்வருவனவற்றில் சுவைஞரின் 'மன வெளியில் உருவம் பெற்று' இரசிக்கப்படுகின்ற வடிவங்கள்.
   1) நடனம், இசை 2) ஓவியம், சிற்பம் 3) வானொலி நாடகம், வில்லிசை
   4) நாடகம், நடனம் 5) சிறுகதை, நாவல் ( )

05. பின்வருவனவற்றில் செந்நெறிக் கலையாக கொள்ளப்படுவது
   1) பரதம் 2) கரகம் 3) காவடி 4) ராம்லீலா 5) ஒயிலாட்டம் ( )

06. இசை நாடகத்தின் பிரதான இசைக்கருவி
   1) உடுக்கு 2) மத்தளம் 3) ஹார்மோனியம்
   4) மிருதங்கம் 5) தப்பு ( )

07. ஐரோப்பாவிலே 'பலே' நடனம் தோற்றம் பெற்ற நாடு
   1) பிரித்தானியா 2) இத்தாலி 3) ஜேர்மனி
   4) அயர்லாந்து 5) டென்மார்க் ( )

08. நாடகத்தை 'கதை தழுவிவரும் கூத்து' என வர்ணித்தவர்
   1) கா.சிவத்தம்பி 2) சு.வித்தியானந்தன் 3) பரத முனிவர்
   4) அபிநவகுப்தர் 5) அடியார்க்கு நல்லார் ( )

09. கலைகளோடு தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ) பார்ப்போருக்கு முன்பாக நிகழ்த்தப்படும்.
ஆ) பார்ப்போரின் மன வெளியில் உருவம் பெறும்.
இ) கற்பனையிலேயே இரசிக்கப்படுவது.
ஈ) நிகழும் கணத்திலேயே இறந்துபோகும்.
உ) உடனடியான எதிர்வினைகளைக் கொண்டிருக்கும்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் ஆற்றுகைக் கலைகளுக்குப் பொருந்தக்கூடிய கூற்றுக்களின் தொகுதி.
1) அ, இ, உ  2) அ, ஈ, உ  3) ஆ, இ, ஈ
4) அ, இ, ஈ  5) அ, ஆ, இ  (  )

10. கலைஞர் 'சின்னமணி' அவர்கள் பற்றிய பொருத்தமற்ற
1) நடிகர்  2) இசை நாடகக்கலைஞர்  3) வில்லிசைக்கலைஞர்
4) இசைக்கலைஞர்  5) சிந்துநடைக் கூத்துக்கலைஞர்  (  )

11. நாடக ஆற்றுகை ஒன்றின் முதன்மையான மூலகம்
1) நடிகன்  2) பார்ப்போன்  3) தயாரிப்பாளன்
4) காட்சி அமைப்பாளன்  5) நெறியாளன்

12. அரங்கின் 'துணைக்கலைகளில்' இணைந்து பணியாற்றும் அவசியம் கொண்ட துணைக்கலைகள்
1) நடிகன் - இசை  2) ஒளி – ஒலி  3) காட்சிவிதானிப்பு - ஒளி
4) நடிகன் - வேடஉடை  5) இசை – காட்சிவிதானிப்பு  (  )

13. புனை கதை ஒன்றில் இருந்து, நாடக எழுத்துருவை வேறுபடுகின்ற விடயங்களில் ஒன்று.
1) கதை சொல்லும் வடிவம்  2) பாத்திரங்கள் காணப்படும்  3) பாத்திரங்கள் பேசும்
4) சம்பவங்கள் காணப்படும்  5) சொற்களால் ஆக்கப்பட்டிருக்கும்  (  )

14. கிரேக்க ரஜடியின் இறுக்கமான கட்டமைப்பை உடைத்தவர் எனக் கூறப்படுபவர்.
1) சோபோகிளிஸ்  2) ஏஸ்கிலஸ்  3) மெனான்டர்
4) யூரிப்பிடீஸ்  5) அரிஸ்ரோபென்ஸ்  (  )

15. கிரேக்க நாடகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ) தெய்வங்களுக்கும் மனிதர்களுக்குமான முரண் கூறப்படுவது.
ஆ) கேலி கிண்டலினால் அரசியல் விடயங்களை விமர்சிப்பது.
இ) நலமார்ந்த ஒன்றின் சரிவைக் கூறுவது.
ஈ) சமகால மக்களின் குறை குற்றங்களைப் பேசுவது.
உ) கற்பனை அழகும் மொழிவளமும் மிக்கது.

மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் கிரேக்க மகிழ்நெறி (கொமடி) யுடன் தொடர்புடைய கூற்றுக்கள்.
1) அ, ஆ, இ  2) அ, இ, ஈ  3) இ, ஈ, உ
4) அ, இ, உ  5) ஆ, ஈ, உ  (  )

16. அரிஸ்ரோட்டில் கூறும் 'ஹமாசியா' என்பதற்கு மிகவும் பொருத்தமான விளக்கம்.
1) அவலச்சுவை வெளிப்பாடு  2) உணர்ச்சிகளின் வெளிப்பாடு
3) அவலத்தை ஏற்படுத்தும் குற்றம்  4) பாடுகளிலிருந்து தூய்மை பெறுதல்
5) உணர்ச்சிச் செப்பம்  (  )

17. அரிஸ்ரோட்டில் கூறுகின்ற 'திறஜடி'யின் மூலக்கூறுகளின் எண்ணிக்கை.

1) 08 2) 06 3) 03 4) 07 5) 09 ( )

18. "இசையினால் விளையும் இன்பம் அவல நாடகத்தால் விளையும் துணை இன்பங்களில் மிகவும் சிறந்தது" என்று கூறியவர்.

1) சோபோகிளிஸ் 2) அரிஸ்ரோட்டில் 3) அரியோன்
4) விற்றூவியஸ் 5) றிச்சாட் சதேன் ( )

19. பின்வரும் கூற்றுக்களில் மனோரதியவாத நாடகங்களுக்கு பொருத்தமற்றது.

1) கற்பனாவாதத்தன்மை 2) கவர்ச்சிகரமான உரையாடல்
3) புனைவுத்தன்மையான நாடகக்கதை 4) கடுமையான ஒழுக்கப்பண்பு
5) வெல்லப்படமுடியாத கதாநாயகன் ( )

20. பின்வரும் அரங்கவியலாளரில் இயற்பண்பு, யதார்த்தவாத நாடகங்களுடன் தொடர்பில்லாதவர்.

1) எமிலி சோலா 2) ஹென்றிக் இப்ஸன் 3) ஸ்ரனிஸ்லவஸ்கி
4) பீற்றர்புறூக் 5) மெனிங்சன் பிரபு ( )

21. வடமொழி நாடகமரபிலே 'அர்த்த பிரகிருதிகள்' என அழைக்கப்படுபவை,

1) கதைப்பின்னல் 2) கட்டமைப்பு 3) நாடக வகைகள்
4) ரஸ உற்பத்தி 5) முத்திரைகள் ( )

22. வடமொழி நாடகங்களில் நாடகக் கட்டமைப்பை ஆதரித்து வளர்த்துச் செல்லும் 'சந்தி'களில் "நாடக நோக்கத்தில் உண்டான நெருக்கடிக் கட்டத்தை சுட்டும் சந்தி"

1) கர்ப்ப சந்தி 2) பிரதிமுகசந்தி 3) விமர்சக சந்தி
4) நிர்வஹனசந்தி 5) முகசந்தி ( )

23. பின்வரும் அரங்க வெளிகளின் வடிவங்களில், நாட்டிய சாஸ்திரம் கூறும் வெளிகளின் வடிவங்களோடு பொருந்தாத வடிவம்.

1) வட்டம் 2) செவ்வகம் 3) நீள்சதுரம் 4) சதுரம் 5) முக்கோணம் ( )

24. சமஸ்கிருத அரங்கில் இசைக்கலைஞர்கள் அமர்கின்ற தளமாக இருக்கின்ற பகுதி.

1) ரங்க சீர்யம் 2) நேபத்யகிரகம் 3) ரங்கபீடம்
4) மத்த வாரணி 5) விஷ்கம்பம் ( )

25. நாட்டிய சாஸ்திரத்தில் 'வியவிச்சார பாவங்களின்' எண்ணிக்கையாகக் குறிப்பிடப்படுவது.

1) எட்டு 2) மூன்று 3) முப்பத்து மூன்று
4) இரண்டு 5) ஐந்து ( )

26. பின்வரும் விடயங்களில் 'அரங்கில் செய்து காட்டப்படக் கூடாதவையாக', சமஸ்கிருத அரங்கு இனங்காட்டும் செயல்.

1) தேரோட்டுதல் 2) போர் செய்தல் 3) பந்தடித்தல்
4) உணவு உட்கொள்ளல் 5) நீர் அள்ளுதல் ( )

27. உரோமைய சாம்ராஜ்ஜியத்தில் "ஊமம்" ஆற்றுகை மரபினை வளர்த்தெடுத்தவர்.
1) செனேக்கா 2) ஆரியன் 3) பிளேட்டஸ்
4) ரெறன்ஸ் 5) ஒகஸ்டஸ் ( )

28. "சடங்கு என்பது உழைப்புப் போக்கில் இருந்து வேறுபட்ட நடைமுறை" எனக் கூறியவர்.
1) பக்த வத்சல பாரதி 2) சி.மௌனகுரு 3) றிச்சாட் சதேன்
4) கா.சிவத்தம்பி 5 ஜோஜ் தொம்சன் ( )

29. சிங்கள மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படும் பின்வரும் சடங்குகளில் 'பெண்களின் நலன்சார்ந்து' செய்யப்படுகின்ற சடங்கு.
1) தொவில் 2) ரட்டயக்கும 3) சன்னியக்கும
4) கறாயக்கும 5) கொகம்பகங்காரிய ( )

30. இந்திய 'ராம்லீலா' சடங்கினை தனது நவீன நாடக ஆற்றுகை நுட்பமாக பயன்படுத்திய மேற்புலத்து நெறியாளர்.
1) பீற்றர் புறுக் 2) அரியான் நூக்சின் 3) குறொட்டோவ்ஸ்கி
4) றிச்சாட் செக்னர் 5) ஆர்த்தோ ( )

31. தமிழ்நாட்டு அரங்குடன் தொடர்புபடும் பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
அ) மூட நம்பிக்கையை எதிர்த்தல்
ஆ) அரசர்களை மகிழ்வித்தல்
இ) விடுதலை உணர்வை மேம்படுத்தல்
ஈ) மக்களுக்கு விழிப்புணர்வூட்டல்
உ) இறைபக்தியை தூண்டுதல்

தரப்பட்ட கூற்றுக்களில் 1947 க்குப்பின்னான தமிழ்நாட்டு அரங்கப் போக்குகளுடன் தொடர்புபடும் கூற்றுக்கள்.
1) அ, ஆ, இ 2) அ, ஆ, ஈ 3) அ, இ, உ
4) அ, இ, ஈ 5) இ, ஈ, உ ( )

32. ஈழத்தில் ஆடப்பட்டு வரும் பின்வரும் கூத்துக்களில் கதை தழுவிவராத கூத்தாக காணப்படுவது.
1) வடமோடிக்கூத்து 2) நாட்டை 3) தென்பாங்குக்கூத்து
4) கோவலன் கூத்து 5) பறைமேளக்கூத்து ( )

33. "பாடலே அரங்காக" என்ற பதத்தாலே குறிப்பிடப்படுகின்ற மரபுவழி நாடகம்
1) கூத்து 2) இசைநாடகம் 3) விலாசம்
4) தெருக்கூத்து 5) வாசாப்பு ( )

34. "நேர்த்திகளை கண்டு நெகிழ இவர்காகுமே" என்ற கோடை நாடகத்தில் வருகின்ற சொல்லாடலுக்குரிய பாத்திரம்.
1) மாணிக்கம் 2) பஞ்சையர் 3) சோமு
4) செல்லம் 5) சாமி ( )

35. "வீரத்திற்காக வீழ்ச்சியை ஏற்ற அவல நாயகனாக சித்திரிக்கப்படும் பாத்திரம்"
1) இடிப்பஸ் 2) லியர்மன்னன் 3) லேயஸ்
4) இராவணன் 5 கிரையோன் ( )

36. இடிப்பஸ் மன்னன் நாடகத்தில் இடிப்பஸ், தனது தந்தையான லேயசை கொலை செய்த நாடு.

1) கொரிந்து 2) ஸ்பாட்டா 3) எதேன்ஸ்
4) ரோகன் 5) பொசிஸ் ( )

37. படத்தில் காட்டப்பட்டுள்ள பாத்திரத்திற்குரிய நாடகமரபு



1) ஜப்பானிய நோ
2) கேரளா கதகளி
3) தமிழ்நாடு தெருக்கூத்து
4) இலங்கை கண்டிய நடனம்
5) தமிழ் நாட்டுக்கூத்து

( )

38. அருகிலுள்ள படத்திலுள்ள அரங்கவியலாளர்



1) சங்கரதாஸ் சுவாமிகள்
2) பம்பல் சம்பந்த முதலியார்
3) பரிதிமார் கலைஞர்
4) பேரா. கணபதிப்பிள்ளை
5) கலையரசு சொர்ணலிங்கம்

( )

39. இங்கு காணப்படும் அரங்கவெளி



1) கிரேக்க அரங்கு
2) உரோமைய அரங்கு
3) யப்பானியோ அரங்கு
4) கூத்தம்பலம்
5) குளோப் அரங்கு

( )

40. அருகில் காட்டப்பட்டுள்ள அரங்கின் ஒளிமுதல்



1) பரப்பொளி
2) கீற்றொளி
3) பொட்டொளி
4) அசையும் பொட்டொளி
5) வர்ணச்சக்கரம்

( )

## பகுதி II

❖ **பகுதி A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பகுதி B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக?**

## பகுதி A

01. 1) 'கலை' என்ற எண்ணக்கருவை விளக்குக. (5 புள்ளிகள்)

2) கலைக்கும், சமூகத்திற்குமான தொடர்பை விபரிக்குக. (5 புள்ளிகள்)

3) ஆற்றுகைக்கலையின் 'பார்ப்போருக்கும்', இலக்கிய கலையின் 'வாசகருக்குமான' வேறுபாட்டினை இரசனையை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக. (5 புள்ளிகள்)

02. 1) 'கிரேக்க திறஜெடி' நாடகத்தின் முக்கிய பண்புகள் 5 தருக. (5 புள்ளிகள்)

2) 'ஈடிப்பஸ் மன்னன்', 'இராவணேசன்' நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு, 'இடிப்பஸ்', 'இராவணேசன்' ஆகிய பாத்திரங்கள் அவல நாயகர்களாக, நாடகங்களில் படைக்கப்பட்ட முறைமைகளை ஒப்பீடு செய்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

03. "காலணித்துவ காலத்தின் நெருக்கீடுகளை வெளிப்படுத்தும் நாடகமாக 'கோடை' அமைந்துள்ளது".

1) அந்நியர் ஆட்சியின் விளைவாக கோடை நாடகம் பேசுகின்ற சமூகப்பிரச்சனைகள் எவை? (5 புள்ளிகள்)

2) "கோடை நாடகத்தில் வருகின்ற 'செல்லம்' பாத்திரமானது அந்நிய ஆட்சியின் விளைவுகளால் தன்னை தகவமைத்த பாத்திரம்" என்பர். இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு செல்லம் பாத்திரப்படைப்பினை ஆராய்க. (10 புள்ளிகள்)

## பகுதி B

04. சடங்குகளும், நாடகங்களும், பாரம்பரிய அரங்கில் இருந்து நவீன அரங்கு ஈறாக தொடர்பு கொண்டிருக்கும் முறைமையை உலக அரங்க வரலாற்றை உதாரணமாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

05. அரசியல், பொருளாதார, சமூகச் சூழல்கள் அரங்க வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துவதனை, தமிழ் நாட்டின் நாடக வளர்ச்சிப் போக்கினூடாக விளக்குக? (15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

i) கொமடி

ii) சற்றயர்

iii) இசை நாடகம்

iv) வடமோடிக்கூத்து

v) நொண்டி நாடகம்

(3x5=15 புள்ளிகள்)